# THE LABOUR COURT, SALEM
# I.D.No. 40 of 2021

<u>25.02.2025</u>

**PW1 – திரு. ரவி**

குறுக்கு விசாரணை– (எதிர்மனுதாரர் தரப்பில்)

நான் 10ம் வகுப்பு தேர்ச்சி பெறவில்லை. எனது பிறந்த தேதி 11.06.1967. நான் எதிர்மனுதாரர் போக்குவரத்துக்கழகத்தில் 28.06.1993ல் தினக்கூலி ஓட்டுநராக பணியில் சேர்ந்தேன் என்றால் சரிதான். 01.05.1994ல் என்னை பணிநிரந்தரம் செய்தார்கள் என்றால் சரிதான். நான் உயிரிழப்பு விபத்து ஏற்படுத்தியதற்காக குற்றச்சாட்டு குறிப்பாணை கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் என்னை நிரந்தர பணிநீக்கம் செய்தார்கள் என்றால் விபத்து ஏற்பட்டதை காரணமாக வைத்து என்னை பணிநீக்கம் செய்தார்கள். என்னை நிர்வாகம் பணிநீக்கம் செய்தபோது என்னுடைய அடிப்படை சம்பளம் ரூ.27,300/– என்றும், பஞ்சப்படி ரூ.6,641/– என்றும் சொன்னால் ஞாபகம் இல்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் இறுதியாக நான் வாங்கிய மாத சம்பளம்ரூ.35,000/– என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மாதசம்பளம் ரூ.35,000/– என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு நிர்வாகம் ஒவ்வொரு மாதமும் சம்பளசீட்டு கொடுக்கிறார்கள் என்றால் சரிதான்.

எனக்கு நிர்வாகம் வழங்கிய சம்பளசீட்டின்படி இறுதியாக பெற்ற மாதசம்பளம் ரூ.34,948/– என்றால் சரிதான். நான் 18.01.2020ம் தேதியில் TN30 N 1509 என்ற பேருந்தில் சேலம் to மதுரை வழித்தடத்தில் ஓட்டுநராக பணிபுரிந்தேன் என்றால சரிதான். அன்று காலை மதுரையிலிருந்து 10.30 மணிக்கு ட்ரிப் எடுத்து சேலம் நோக்கி

வந்துகொண்டிருந்தபோது திண்டுக்கல் எ.வெள்ளோடு என்ற இடத்தில் வரும்போது நான் ஓட்டிவந்த வாகனம் விபத்துக்குள்ளானது என்றால் சரிதான். நான் வந்தது நான்கு வழி தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். அந்த நான்கு வழிச்சாலையில் நடுவில் Divider ல் பூச்செடிகள் வைக்கப்பட்டீருக்கும் என்றும், அதற்கு டேங்கர் லாரியில் இருந்து பைப் வழியாக ஒருவர் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தார் என்று சொன்னால் சரிதான். எனக்கு வருடாவருடம் எதிர்மனுதாரர் போக்குவரத்துக்கழகத்தில் கண் பரிசோதணைக்கு அனுப்பி வருகிறார்கள் என்றால் சரிதான். எனக்கு துாரப்பார்வையோ, கிட்டப்பார்வையோ இல்லை என்றால் சரிதான். லாரி தண்ணீர் விட்டுக்கொண்டிருந்த வழி மற்றும் நான் பேருந்தை ஓட்டி வந்த வழி நேரான வழி என்றால் சரிதான். லாரியை சட்டென திருப்பி விட்டார். லாரி திடீரென திரும்பிய விபரத்தை நான் நீதிமன்றத்தில்தான் முதன்முறையாக சொல்கிறேன் என்றால் சரிதான். விபத்தில் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தவர் இரண்டு வண்டிகளுக்கிடையில் மாாட்டிகொண்டார் என்றால் இல்லை. லாரி திரும்பியதால் லாரிக்கு முன்பாக அந்த நபர் மாட்டிக்கொண்டார்.

நான் சொல்வது தவறு என்றும், நான் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வண்டியை ஓட்டிக்கொண்டுபோய் லாரியில் இடித்ததால்அந்த நபர் இறந்துவிட்டார் எறன்றால் சரியல்ல. விபத்தில் நான் ஓட்டிச்சென்ற பேருந்தில் வலது புறம் மற்றும் முன்புறத்தில் அதிக சேதம் ஏற்பட்டது என்றால் சாட்சி Ex.R6 பேருந்தின் புகைப்படத்தை பார்த்துவிட்டு என்னிடம் காட்டப்படுவது நான் ஓட்டி

வந்த பேருந்தா என்று எனக்கு தெரியாது என்றும், விபத்து ஏற்பட்டவுடன் எனக்கு மயக்கம் ஏற்பட்டுவிட்டது என்றும் சொல்கிறார். பேருந்தின் புகைப்படங்கள் மற்றும் ஆவணங்களை நிர்வாகம் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியும் என்றால் எனக்கு தெரியாது. என்னென்ன ஆவணங்கள் நிர்வாக தரப்பில் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. விபத்தில் இறந்த நபரின் வாரிசுகள் திண்டுக்கல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் நிர்வாகம் தாக்கல் செய்த எதிருரையை என்னுடைய தரப்பு ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து என்னுடைய அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் நடக்கவில்லை என்பதை காண்பிக்க இந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

MCOP வழக்கின் தீர்ப்பினை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கின் தீர்ப்பில் என்னுடைய அஜாக்கிரதையால்தான் விபத்து நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றும், அந்த வழக்கில் நானும் முதல் எதிர்மனுதாரராக காட்டப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் நான் தரப்பினராக உள்ளேன் என்றால் சரிதான். நிர்வாகம் விபத்து வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிருரையை எனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. Ex.P1 கடிதத்தை நிர்வாகத்திற்கு அனுப்பியதற்கும், அதை நிர்வாகம் பெற்றுக்கொண்டதற்கும் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். என்னை நிர்வாகம் Ex.M4 20.01.2020 ம் தேதிய உத்தரவின் மூலம்

தற்காலிக பணிநீக்கம் செய்தார்கள் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு நிர்வாகம் Ex.M8 19.02.2020 தேதியிட்ட உத்தரவின்படி என்னுடைய தாற்காலிக பணிநீக்கத்தை தளர்த்தி ஜான்சன் பேட்டை 1 கிளையில் பணிக்கு நேரில் ஆஜராக கடிதம் அனுப்பப்பட்டது என்றால், எனக்கு கடிதம் வரவில்லை. நான் அக்கடிதத்தை நேரில் கையெழுத்து போட்டு வாங்கிவிட்டு தற்போது வழக்கிற்காக எனக்கு கடிதம் வரவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மீது பதிவு செய்யப்பட்ட Ex.M2 முதல் தகவல் அறிக்கையை நான் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் பேருந்தை இயக்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் Ex.M2 முதல் தகவல் அறிக்கையில் 7வது காலத்தில் குற்றவாளியாக என்னுடைய பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை.

காலம் 12ல் TN30 N 1509 என்ற பேருந்தின் ஓட்டுநரின் கவனக்குறைவு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அந்த பேருந்தின் ஓட்டுநர் நான்தான் என்றும் சொன்னால் சரிதான். ஆனால் நான் கவனக்குறைவாக பேருந்தை ஓட்டவில்லை. என் மீது பதிவு செய்யப்பட்ட குற்றவழக்கு நிலுவையில் உள்ளது. விபத்திற்கு நான்தான் முழு காரணம் என்றும், விபத்தை நான் ஏற்படுத்தியுள்ளதால் நிர்வாகம் என்மீது சுமத்திய குற்றச்சாட்டு சரியானது என்றால் விபத்திற்கு நான் காரணமில்லை.

என்னுடைய பணிப்பதிவேடு நிர்வாக தரப்பில் ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. Ex.M16 ஆவணத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் பணிப்பதிவேட்டில் உள்ள புகைப்படம்

என்னுடையது என்றால் சரிதான். இந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிறகு எனக்கு வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் வழங்கப்பட்ட முன்தண்டனைகள் ஆகியவற்றை படித்துப்பார்த்து தெரிந்துகொண்டேன் என்றால் இல்லை. நிர்வாகம் என்மீது ஒரு குற்றச்சாட்டு குறிப்பாணை கொடுத்து விசாரணை நடத்தினார்கள் என்றால் விசாரணை நடத்தவில்லை.

என்னிடம் தற்போது காண்பிக்கப்படும் கடிதம் நான் கைப்பட எழுதிக்கொடுத்த கடிதம் என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த அதிகாரக்கடிதத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் தாக்கல் செய்த மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றால் இல்லை. சாட்சி பின்னிட்டு என்னுடையதுதான் என்கிறார். என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் சாட்சி அதை பார்வையிட்டு இல்லை என்கிறார். இவ்வழக்கை பற்றி எனக்கு முழுமையாக தெரியவில்லை என்றும், நிர்வாகம் வழங்கிய குற்றச்சாட்டு குறிப்பாணை மற்றும் நான் கொடுத்த கடிதம் பற்றி முழுமையாக தெரிந்துகொள்ளாமல் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

இந்த வழக்கில் சொல்லப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையை தவிர முன்பு 3 உயிரிழப்பு விபத்துக்கள் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் இல்லை. Ex.M9 27.10.2020 2 வது காரணம் கேட்கும் அறிவிப்பு மற்றும் இறுதி உத்தரவில் எனக்கு வழங்கப்பட்டுள்ள

முன்தண்டனைகள் குறித்து சொல்லப்பட்டுள்ளது என்றால் இந்த அறிவிப்பு எனக்கு வழங்கப்படவில்லை. அறிவிப்பு பதிவுத்தபாலில் அனுப்பப்பட்டதை பெற்றுக்கொண்டதற்கான ExM10 ஒப்புகை அட்டையில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல. என்னுடைய பெயர் K. ரவி. என்னுடைய பணி எண். DR 2887. அப்பா பெயர் குப்புசாமி, என்னுடைய முகவரி வாழக்கோம்பை அஞ்சல், கெங்கவள்ளி தாலுக்கா, சேலம் மாவட்டம்–636113. நான் சொன்ன முகவரிக்குத்தான் Ex.M9 கடிதம் வந்துள்ளது என்றால் சரிதான்.

ஒப்புகை அட்டையில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது இல்லை. நான் நிர்வாகத்திற்கு கொடுத்துள்ள 2 வது காரணம் கேட்கும் அறிவிப்பிற்கான பதில் கடிதத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சாட்சி அதை படித்துப்பார்த்து கையெழுத்து என்னுடையதுதான் என்கிறார்.

**31.10.2020 தேதியிட்ட என்னுடைய விளக்கக்கடிதம் – Ex.M18**

இந்த விளக்கக்கடிதத்திலும் நான் நிர்வாகம் சொல்லியுள்ள முன் பணிக்கால தண்டனைகள் குறித்து எந்த மறுப்பும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

நான் ஏற்கனவே 3 முறை உயிரிழப்பு ஏற்படுத்திபோதும், நிர்வாகம் எனக்கு குறைந்த தண்டனைதான் வழங்கியது என்றும், நான் 4 வது முறையாக உயிரழப்பு ஏறபடுத்தியாதால்தான் அதிக பட்ச தண்டனையான என்னை நிரந்தர பணிநீக்கம் செய்தார்கள் என்றால் இல்லை. நான் ஏற்கனவே 3 முறை உயிரிழப்பு ஏற்படுத்தவில்லையா என்றால் ஏற்படுத்தவில்லை. ஏற்கனவே நிர்வாகம் எனக்கு ஊதிய

உயர்வை நிறுத்தி வைத்து தண்டனைகள் வழங்கியுள்ளார்கள் என்றால் ஆமாம். அந்த தண்டனைகள்களை எதிர்த்து நான் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தற்போது என்ன வேலை செய்கிறேன் என்றால் நான் சும்மாதான் இருக்கிறேன். என்னுடைய ஓட்டுநர் உரிமத்தை நாளது தேதி வரை புதுப்பித்து வந்துள்ளேன் என்றால் சரிதான் என்னுடைய ஓட்டுநர் உரிம நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

எனக்கு திருமணமாகி ஒரு மகன், ஒரு மகள் இருக்கிறார்கள். மகள் கல்லூரியில் படிக்கிறார். மகன் பள்ளி செல்கிறான் எனக்கு விவசாய நிலம் எதுவும் இல்லை. என்னுடைய மனைவி கூலி வேலைக்கு செல்கிறார். என்னுடைய மனைவி பெயர் லதா என்றால் சரிதான். என்னுடைய மனைவி காவல்துறையில் வேலை செய்துகொண்டிருக்கிறார் என்றால் Home Guard போலீசாக இருந்தார். தற்போது பணியில் இல்லை. விபத்து நடந்த காலத்தில் என் மனைவி ஆயுள்பட்டி காவல் நிலையத்தில் காவலராக பணியில் இருந்தார் என்றால் சரிதான். இப்போதும் என் மனைவி காவலராக உள்ளார் என்றால் சரிதான். நாஙகள் சேர்ந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். எனக்கு போதிய வருமாணம் மற்றும் குழுந்தைகளை படிக்கவைக்கக்கூடிய பொருளாதாரம் இருப்பதால்தான் நான் எதிர்மனுதாரர் போக்குவரத்துக்கழக பணியை அஜாக்கிரதையாகவும் , கவனக்குறைவாகவும் செய்து வந்துள்ளேன் என்றால் இல்லை.

என்னைப்போன்ற ஓட்டுநர்கள் உயிரிழப்பு விபத்து ஏற்படுத்துவதை நிர்வாகம் ஒருபோதும் அனுமதிக்காது என்றால் சாட்சி

வெகுநேரம் பதில் சொல்லாமல் மௌனமாக இருக்கிறார். ஏற்கனவே நிர்வாகம் எனக்கு பல சந்தர்ப்பங்கள் கொடுத்தும் நான் திருந்தாததால் பணிநீக்கம் செய்துள்ளார்கள் என்றால் இல்லை. அதனால் நான் தாக்கல் செய்துள்ள தொழிற்தாவா மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் சொன்னால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem